உ

ஓம் பராசக்தி துணை.

மதவேழநாயக்கனூர்புளியங்குளம்எனப்பெயர்வாய்ந்த
குளந்தாபுரியிற்,
றிருக்கோயிற்கொண் டெழுந்தருளிய
ஸ்ரீமதி மாரியம்மை மீது

# தோத்திரப்பாடல்கள்.

நயம் சுத்தப்பதிப்பு



பீ ரூ.

16 APR 1925
MADRAS

இஃது
ஷையூர் ம-ா-ா-ஸ்ரீ மகாலிங்க நாடாரவர்கள் குமாரர்
ம-ா-ா-ஸ்ரீ
அருணாசல நாடாரவர்கள் இயற்றியது.

விருதுநகர் ஸ்ரீமாந்
இராமலிங்கக் குருக்களவர்களது
சச்சிதானந்த அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

1925.

128886

உ

ஓம் பராசத்தி துணை.

மதவேழநாயக்கனூர் புளியங்குளம் எனப்

பெயர்வாய்ந்த குளந்தாபுரியிற்

றிருக்கோயிற்கோண் டேழுந்தருளிய,

ஸ்ரீமதி மாரியம்மைமீது

# தோத்திரப் பாடல்கள்.

OFFICE OF THE REGISTRAR OF ... 16 APR 1925 MADRAS

இஃது

ஷியூர் மகா-ள-ள-ஸ்ரீ மகாலிங்க நாடார் அவர்கள்

குமாரர் மகா-ள-ள-ஸ்ரீ

அருணசல நாடாரவர்களா வியற்றி,

விருதுநகர் ஸ்ரீமாந்

இராமலிங்கக் குருக்களவர்களது

சச்சிதானந்த அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1925

கிரயம்] [அணா 2

உ

ஓம் பராசக்தி துணை.

# சாற்றுக் கவிகள்.

178886
Q25:58:211M1A N25

[illegible]ப்பலால்புரம் மகா-ா-ா-ஸ்ரீ

## [illegible]க்கணப் புலவரவர்க ளியற்றிய ஆசிரியம்

அறுசீரடி கழிநெடிலடி விருத்தம்.

பைஞ்ஞின்ற பாந்தண்முடி மேலுறு மிந்தப் பாரதின் மேன்
மைஞ்ஞின்ற வாட்கண் மாரியின் மேற்றொடை யாப்பென வாச்
செய்ஞ்ஞின்ற சில்னரு ணாசலனு செய்ய நூன் மொழிந்தான்
மெய்ஞ்ஞின்ற மோனைத் தமிழ்ப் புலவோ ரகமெய்ப் புறவே.

விருதுநகர் ஸ்ரீமாந்

## இராமலிங்கக் குருக்களவர்கள் இயற்றிய வெண்பா.

பொன்னார் குளந்தா புரிமாரித் தாய்மீது
சொன்னான் தமிழினால் தோத்திரப்பா—எந்நாளும்
சாதுசங் கத்தினிலே சாருமரு ணாசலவேள்
ஓதுவார்க் கின்ப முற.

விருதுநகர் சங்கீதசாகித்ய வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ

## அ. கந்தசாமிக் கவிராயரவர்கள் இயற்றிய விருத்தம்.

திருக்குளந்தா புரியுறையு மாரியம்பொற் சிலம்பணியுஞ்
செழுந்தாண் மீதில்
உருக்கமெனுந் தேன்றதும்புஞ் செஞ்சொன்மலர் மாலைபுனைந்
துதவி னானால்
பெருக்கவெண்ணீ றணிமேனி மகாலிங்க வழுதிதவப்
பேற்றால் வந்தோன்
அருக்கன்முதல் நவக்கிரகந் தனுக்கிரக முறுமருணா
சலமென் போனே.

விருதுநகர் க்ஷத்திரிய வித்தியாசாலை மானேஜிங் போர்டு பிராஞ்சு
ஸாஸ்பதி வித்தியாசாலை ஹெட்மாஸ்டர் மகா-ள-ள-ஸ்ரீ

### தே. சு. சங்கரலிங்க நாடாரவர்கள் இயற்றிய வெண்பா

கொண்டறவழ் சோலைக் குளந்தைபுரி மாரியின்மேல்
அண்டரெலாங் கேட்டங் கதிசயிக்க—விண்டான்
அருணாசலக் கவிஞன் அன்புநிறை பாடல்
கருணாவமிர்த மொக்குங் காண்

மதவேழநாயக்கனூர் புளியங்குளம் என்ற குளந்தாபுரி
மகா-ள-ள-ஸ்ரீ சுப்பிரமணியப் புலவரவர்கள் குமாரர்

### அண்ணாமலை உபாத்தியாயர் இயற்றிய வெண்பா.

பொழிலார் குழந்தைநகர்ப் பூமாரி மீதே
யெழிலார் பதிக மிசைத்தான்—மொழிநா
லருண சலமா லவனில்நூ லாய்ந்து
தெருளாக வுள்ளந் தெளிந்து.

ஷையூர் இந்நூலாசிரியர் மாணாக்கர் மகா-ள-ள-ஸ்ரீ

### செ. க. பாலப்ப நாடாரவர்கள் இயற்றிய வெண்பா.

பண்ணிலா ரின்னிசையாப் பாவிலா ரின்சுவையா
மண்ணிலார் மன்பதைக்கு மாணிக்கந்—கண்ணியா
டிருவார் வடிவுடையா டேமாரி மீதி
லருணசலஞ் சொன்னூ லாம்.

சாற்றுக்கவிகள் முற்றுப்பெற்றது.

—•—

உ

ஸ்ரீ பராசக்தி துணை.

மதவேழநாயக்கனூர் புளியங்குளம் என்ற குளந்தாபுரியிற்
திருக்கோயிற்கொண் டெழுந்தருளிய,

ஸ்ரீமதி மாரியம்மை மீது

# தோத்திரப் பாடல்கள்.

## விநாயகர் காப்பு.

தவமுளார் பலர்சார்ந்திடுந் தற்பரன்
பவமுளார் மனப்பாங் குறையாப்பதன்
சிவமுளே வருஞ்சிந்துரப் பொற்பத
மவமெலாமற வன்புடன் போற்றுவாம்.

### இதுவுமது.

செஞ்சொன் மறைதினமே துதிசெயுமம்பிகை மாரி
கஞ்சந்திகணு பைங்கழல்கமழ் பாகொடுபோற்ற
வஞ்சொன்மலை மகடந்திடுவணி குஞ்சரவதனத்
தஞ்சமென திருபொற்சரண்டமியேனை நீயாளாய்

## வாணி துதி.

எழுசீர்சழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

வனசமாமலர்போலொளிர்மதிமுகத்தில்வள்ளையைக்குமிழையேசி திக்
கனகமாயிலகுதோடிவர்குழையைக்கதிப்பபோலுறுமயில்விழியாத்
தனதமார்மலருந்துசொடங்கலனும்வெளுப்புரக்தானுமெய்வெளுத்தவ்
வனந்தரமறைகட்கணியெனயிலகுமம்புயப்பதம் பணிந்தேனே

### இதுவுமது.

நான்முகமுடைய வேதனன்மருங்கினலமுடனமர்ந்து மெய்கவினத்
தேன்மறைக்கிதந் தொனித்திடயாழிற்றெளிவுறப்பாடியுந்தினமும்
வான்றகுநறையம்புயப் பொருட்டுறையுமன்னையேயான்றிருடைபுகலக்
கான்றருகமலப் பதத்தினைத்தொழுதேன் கடைக்கணித்தருள்புரிகு

## அவையடக்கம். [வையே.

நன்றுடைக்குளந்தாபுரி யெனமுப்பேர்மலிந்திடுபதிதனில் வாழும்
பொன்னுடை மார்பன்றங்கையம்மாரி பூங்கழற்பாவினுற்றுதிக்க
வென்னுடைமனதால் யானறிந்தளவி லியம்பிடு புன்மொழியதனைத்
தன்னுடை மதலைபழலைபதாகத் தகவுடன் பொருப்பரேதக்கோர்

இதுவுமது.

எத்திசைதனிலுந் தன்புகழ்துதிப்ப வெழிலுறவமர்ந்திடு மாரிச்
சத்தியம்பிகை மாதாப்பதமீது சாற்றுமித்தமிழ் தனிலோர்சார்
நத்திய நவைகளிருக்கினும்பொறுத்து நவிரறுயாப்பெனநினைவீ
ரத்தியையுரித்த வத்தனினருளை யன்புடன்பெற்றிடும் பெரியீர்.

நூற்றொடர்ச்சி.

எப்பொருடனக்கு முட்புகுவடிவாயெங்கினுந்தன் னருள்பரப்பி
யப்பொருளுரைக்க நால்வருக்காகவமர்ந்த கல்லானிழற்பரம
னொப்பிலாவடி விற்றொருபாகமோங்குறுப் பச்சைமாமயிலாத்
தப்பிலாமறைகளுணர்ந்தவர் போற்றுந்தற்பரி யாண்டருள்வாயே

மலையரசனுக்குமகவெனத் தோன்றுமதிமுகத்திரு நுதலணங்கே
யலைகடற்றுயிலு மச்சுதனழித்த வழகுறு மதனவேளெரித்தே
தலையதைமாலை யாகவேதரித்துத்தகுநடம் புரிபவ னெதிராய்
மலைந்துமேநடனம் புரிந்தருள்பவளே மறைசொலுமரகதமணியே

சஞ்சிதவினையாற்றளர்வுறும்பொழுதுஞ்சலிப்பிலாமனமயக்கதனாற்
றுஞ்சலாய்ப்பவங்கள் பலபலவியற்றித் துயருறும்வாழ்விலுழலுந்
தஞ்சமொன்றில்லாப்புன்மையேன்வினைகடவிர்த்திடநின்மனமிரங்கி
யஞ்சலென்றருள்வா யருட்சிவசுடரேயணியுறு மம்பிகாபரையே

அன்பர்கடிக்கு மருட்பெருங் கடலேயரனுடன்றிரு நடமாடு
முன்பதமன்றிப்புன்மையேன்றனக்குவுலகினிலுறுந்துணையுளதோ
மன்பதைதனக்குப்பவப்பிணியகற்றமருந்தென விளங்குநாரணியே
யென்பவந்தொலைத்தேயுன்பதந்தருவாயெழிலுடையிமையவெற்பாளே

சோகமாரன்பர் பவவினையகற்றுஞ் சோபிதமெனுமலர்ப்பதமு
மாகமதொளிருமரகத வடிவு மருள்தருங்கருணையார்விழியு
மேககாரெனவே கரியபைங்குழலுமெலிந்தநுண்ணிடையுமேகவின
வேகநாயகியாக் குளந்தைப்பதியிலெழிலுறு மீறிலாவடிவே

போற்றிலேனுன்னையொருகணமேனும்பொருந்திலேனன்னெறியதனி
லாற்றிலேன்மனதையணைந்திலேனறிவையருட்டருபமறைமுதலாய
தேற்றிலேயிருந்து திருநடமாடுந்தேவியேயுனைப் பணிந்திடேன்
மாற்றிலேன்பவத்தைமண்மிசையுழன்றேன்மனமிரங்கிவைகோமளமே

வண்டுறைநறுமென்மலர்க்குழலுடையாம்வானுறுமின்னிகரிடையாங்
கண்டுறைதீஞ்சொற்பயிலயில்விழியாக்கனியெனுங்கொவ்வையம்வாயாந்
தண்டுறையரம்பையெனநிகர்குறங்காதாமரையெனவுறும்பதத்தாய்
விண்டுறையுததி யெனநிகரளியாய் விமலையாயருடருமெந்தாய்

மும்மையி லேற்றவினையினைநுகர முன்னிடுந்தனுவினைக்கருதா
திம்மையிற்றோன்றும்பொருளெலாநோக்கியாதிலும்பற்றறவினைகொண்
டம்மையிலுறுவ தறிந்திடாராகியந்தன லறுநரகடைவோர்
தம்மையேன்படைத்தாத்தருநிகரானசத்தியே மாரியம்பிகையே

மதிநிகர்வதன மிலங்கவங்காந்த ளெனுங்கரமுத்தலைப்படையுஞ்
சதிமயக்கறுத்தோர்பணிந்திடுபதமுஞ்சகளமாம்வடிவினினோக்கித்
துதிபுரிந்தடியேன்பவவினை நீக்கித்துயரறுத்திடமுனம்வருவாக்
கதிபுனையலதுவேலைசூழ்ஞாலங் கண்டிலேன் கவுரியாமணியே

இந்தவெஞ்சடம்வந் துற்றவாறறியா தினிப்புகுங் கதிகளுமுணரா
தந்தமாமாயைவலையினிற்றகைந்துத்தனை மறந்தளவிலாவுயிர்கொன்
றிந்தவன்றனுவையோம்பியேயிருக்கின்றிடநமன்வந்துறும்பொழுதி
லந்தவந்தகனுக் கென்னதானுரைப்பாரழகொளிரருட் சிவபரையே

வாசியையடக்கிச்சுழிமுனைவாயல் வகையுறத்திறந்து வன்னியினாற்
றேசினைமதிமண்டலத்தினிலூறு மமிர்தினையுண்டுநிட்டையினி
லேசிலாதிருந்துநமன்றனைவென்றே யிறிலாதிருந்திடும் பெரியோர்
பேசியமறையாற்றுதித்திடு ஞானப்பேரொளியான பெண்ணரசே

அருஞ்சமயாதி பல்வகையாயதனைத்திலுஞ்சொலுமுறையோரி
னுருவமாயாவுந்தானதேயாகி யவணிலவுளவெதும்பொருளாத்
திருவிளையாடுந் தேவிநீயல்லாற்றேர்ந்திட வோர்வகையுளதோ
மருமகமறையோரடிபணிந்தேற்று மலர்க்கழலுடைய மாமயிலே

சீரியவலைச்சியாகிநற்குறத்திக் கெழிலுறுமாமியாம்பச்சி
வாரியிற்றுயிலும் பாம்பணையோன்றன் வனப்புறுநளினதங்கச்சி
கூரியபாசாங் குசந்தியாஞ்ஞானங் குலவிடுநெடுங்கணம்படைச்சி
காரினைக்காப்பொருங்குமின்னிடைச்சி கருபதந்தருவைமாமலைச்சி

பூதமாய்நானுகற்சராசரமாப் புலன்களாய்மனமறியுயிராய்
நாதமாய்விந்தாயாண்பெ ணைபலியாகலந்திகழக் கரந்தாளுப்
வேதமாய்பொருந்திபிவை யெலாமலவாய்விளங்கியவுலகமாமாதாப்
யாதமாப்ந்தடியேனுனைப்பணிந்திடப்பொற்பதமலர்தக்கருள்வாயே

உள்ளமாங்காட்டிற்கலையதாமலத்தாலுழுதுபின்னகவிருட்பூண்டைத்
துள்ளவேகளைந்துவுறுதியாமெருப்போட்டுயர்ந்திடுஞானவித்ததனை
மெள்ளவேவிதைத்தம்மறிவுநீர்பாய்ச்சி மேலுறுமவைக்களைகளைந்து
கள்ளராம்பொறியோர்க் கக்கரமூன்றுங்காவல்செய்வேலியாங்கவுரி

நீலியேசூலப்படையுடையவளேநிகளத்திடுமுலகுபெற்றவளே [மீள
வாலியேயிறக்கவொருகணைதொடுத்தமான்முதற்றொழும்பதத்தா
நாலிரண்டொருங்கு சேரெழுத்தவனை நலமுறப்பயந்தவம்மணியே
பாலிலோர்மொழியாப்பசுமையங்கொடியாப்பகவதிநின்பதந்துணையே

பிறந்துமண்மீதிலவதியேகுடிகொள் பித்தனேனுன்பதந்தனையே
மறந்துவெம்மாசாபாசமாயுழன்றம் மயல்தருமுலகவாழ்வதனிற்
கறந்துநின்னடியார்க்கேவல்செய்யாது கழித்தனனாட்களைப்பலவா
திறந்துமேபுசித்தோன்றேவியே யென்றனின்னநீரருட் சிவகாமி

மும்மலமுதலாச்சொல்லியவேனை முயன்றிடுநவவழியொழுக
விம்மலசடத்துட்சிழொடு கிருமிவிழைநரம் பென்புமாமிசமே
செம்மறென்லரசுபுரிந்து தானென்னேசீயிது நரகவாழ்வலவோ
கம்மொருதசத்தான்றனைப் பழிக்காகக்கடிந்தவனிளைய பூரணியே

மாயமாமுலகவாழ்க்கையிற்றிளைத்துமனமெனும்பேய்கையிலடங்கிக்
காயுமாஞ்சுமையைக்காயமென்றெண்ணிக்கதியினையறிந்திடேன்மே
மேயமாம்பவங்களெண்ணிலாபுரிந்தேனேசிலாமறைபுகழணங்கே [து
தூயமாபதந்தந்தென்னை நீயாள்வாய்துலங்குறுஞ்சுந்தரப்பொருளே

முப்பொழுதருந்தித்தேடுதல்பொருட்டாய்முன்னியபலவினையியற்றிச்
செப்பொடுநிகரம்மிளமுலையாரைச் சேர்ந்திடநினைவதேயன்றி [யே
யெப்பொருள்யாவும் பரவியநின்னையேற்றிலேன் போற்றிலேன்தா
யப்பொழுதேமன்கைக்கொளுஞ்ச மயமார்துணைநீயலாதந்தோ

இளவெயிலொளிர்க்குமணியுறு மகுடமிலங்கிடவனசமார் முகமுங்
களபமுத்தாரப்புனைதருமார்புங் காண்டகுதிருவுடற்பொலிவு
மளவிலாமறைகடனக்குமே யெட்டாவற்புதப்பதத்தினதழகுங்
களவிலாமனதா யிருந்துநான்காணற்கருள்வதெக்காலமோவம்மா

எடுத்திடுஞ்சடமோ வளவிலவிவைகட் கிடுபெயரெண்ணிலசரிக்க
வடுத்திடுமிடமோபற்பலவீன்ற வெந்தைதாய்பயந்தசேயிலக்கந்
தொடுத்திடுகணித முடிந்திலாவின்னுமியற்றிய விருவினையடங்காப்
படுத்திடுமனனைவிதி வழிநின்றும்பகவதி சரணடைந்தகற்றே

சந்தைபோலுற்ற குடும்பவாழ்வதனைச் சதமெனவிலவு காகிளியாய்
முந்தைநாண் முதலா யிந்தநாள்வரையு முடிந்தவர்மணலினுமதிகம்
பந்தையார்தனங்கொண்மடந்தையைப் பாராதீறுறக்குருபதமுற்றே
தந்தையுந்தாயாம்நின்பதமடைந்தோர் தான்சிலரென்றனருணர்ந்தோர்

முன்னமேதோன்றியழிந்திடுங் கடங்கண்முடிவிலாத்தொகையதுவாக
வின்னமுந்தோற்றி மாழ்கிடுமுயிர்க ளெத்தனையோ யெவருரைப்பா
ரன்னவாறிருப்ப வுடம்பினுக்காக வளவிலா வினைகளேகோட
லென்னவோமனதி னிகழ்ந்திடுமாற்றமியங்கிடுமாயைசெய்வியப்பே

பாண்டவர்தனக்காத் தூதுபோய்மீண்டபச்சைமாறனக்குநேரிளையாய்
காண்டவமெரித்த காளையோடன்றுகடுஞ்சமர்புரிந்துவில்லடிகொ
டாண்டவமூர்த்திதனைப்பொரவிஜயந் தான்புரிந்தொருதனமிழந்த
வாண்டவளானவங்கயற்கணியே யடிபணையாண்டருள்புரிவாய்

அண்டர்கடுயர்தீர்த்தருடர நினைந்தவ்வருந்தவர்சாபமதேற்ற
வண்டனுமகிடன்றனைத்தலைதுணிக்கு மற்புதப்பெருஞ்சுடர்வடிவே
தொண்டனுமென்றன் பவத்துயர்நீக்கத் திருவுள மிரங்குவாய்காள
கண்டனின்பாகங் களிப்புடனமர்ந்து கவினுறுங்கருணையாரனையே

### அறுசீர்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பவமதிற்செனித்து மீளப்பவமதைத்தேடும்பாமர்
நவமணியாணநின்னை நாடிடவருளுண்டோகொல்
சிவமகலாதவந்தச் சிற்பரிசினவேற்கண்ணாத்
தவமதைபார்ந்த மேலோர் தான்றொழும் பதத்தினாளே

வந்தியின்பிட்டால் வைகைமண்சுமந்தடியையேற்று
நந்தியிலமர்ந்த ஞானநாயகனுருச்சேர்வல்லிப்
பந்தியிற்பிணிக்குமோனைப் பாத்தொடையணிந்துமீதே
இந்தினார்பிரபை யென்னவிலகிடுவதனத்தாளே

ஆரியமுதலாச்செப்பு மருங்கலையுணர்ந்துமென்னை
சீரியரெனவேபோற்றத் திகழவைபொலிந்துமேலாங்
கூரியசெங்கோல்கொண்டோர் குடைநிழலிருந்துமென்னை
வாரியிற்றுயில்வோன்றங்காய் வாழ்நினைப்போற்றார்வாழ்வே

பண்டனைக்காட்டுசொல்லும் படையினைக்காட்டுகையுங்
கொண்டலைக்காட்டுகோதைக் கோண்பிறைகாட்டுநெற்றிக்
கண்டனில்காட்டுநீலக்கவின் மெயுங்காட்டுமின்னு
மண்டலங்காட்டுகோலமடங்கன் மீதமர்ந்தமாரி

மந்திரமறைகள் போற்றுமரகதச் சோபைவாய்ந்த
சுந்தரவடிவாயுன்றன்றாய் மலர்ப்பதத்தினாயேன்
றந்திரமயக்கைநீக்கித் தருமனஞ்செறிம்பச்செய்வா
யிந்திரனாதி புத்தேளிறைஞ்சிடும் பதமார்மின்னே

விண்டயனாதிதேவர்விளங்கு பாற்கடலைமேனா
டிண்டரக்கடைந்தபோதத் தீவிடமுண்டுமாலோன்
பெண்டதாய்வரவே சேர்ந்தபெரியவன்பாகமுற்றுப்
பண்டதாய்மறைகள் பேசும்பச்சிளங் கிள்ளையாளே

திண்மனப்புலிக்காலன்சேய்க் கீந்தபா லாழிமீளக்
கண்மலரோனுக்கீந்த காளையூர்ந்தவனையொன்றிச்
சண்மதப்பொருளானின்ற சண்முகன்றன்னையீன்ற
பண்மலிபொருந்துஞ் சொல்லாப்பைந்தொடிபாலவாலை

கரிகரார்வயினிற் சிக்கிக் கண்கலுழ்ந்தாதிமூல
வரிகரியென்னவோலமிடும் பொழுதன்று காத்த
வரியவன் றங்கையான வம்பிகாநின்பொற்பாத
முரிமையாய்வழிபட்டோரே யுலகினிற் பெரியோரென்பர்

நள்ளிரவதனிற்றூறு நடந்தவன்பரவைமுன்றி
லுள்ளியவன்பர்தம்மை யுறவுசெய்பரமனோர்பாற்
றெள்ளுறவமர்ந்தஞானத் தேவிநின்பதமேயல்லா
லுள்ளுறவொன்றைவேண்டே னுழதியார்ஞாலமீதே

தேசியைத் தொண்டர்தம்மை திருவுற வழிப்பட்டில்லேன்
பூசிடும்பொடியரர்ந்துன்னைப் போதுகொண்டருச்சித்தில்லே
னேசிடும்படியாநின்றே யின்மொழிமடந்தைதோய்ந்துக்
கூசிடும்படியாநின்றேங் கொந்தலர்குழலினாளே

எண்டிசையுலகமெங்கு மேற்றிடு நின்பொற்பாதங்
கண்டிவன்களிக்குமெல்லை கடையனுக்கருள்செய்வாயோ
வண்டிசைபாடாநின்ற மன்றலங்கொந்தார்கோதாத்
திண்டிறல்வயமாவூர்ந்த தேவியே நளினக்கண்ணி

திருநிகரில்லாளில்லிற் றியங்கமாமதனலீலைத்
தருமதிமுகத்திலோடித் தனிக்குழைதாவுங்கண்ணாண்
முருவலின்மயங்கிவீழு மூடர்கள்சேர்க்கைநீக்கிக்
கருவினைகடக்குமேலாங் கமழ்பதமருள்செய்வாயே

ஓதியிலந்தார்வேய வுறுஞிமிறிசைக்காந்தாரங்
காதியிலாற்றுகின்ற கவின்பெருங் கடவுட் பாவாச்
சோதியாயுலகேழீன்ற சுந்தரீசொலுங்காலெல்லை
யாதியுமந்தமில்லா வருட்பெருங்கடலேயன்னாய்

உருங்கலன்பலவேயுற்று மொன்றியபொன்னொன்றேயாந்
தருவகையுறுமேழ்தோற்றத் தனுபலசீவனென்றுந்
திருச்சுரபிகளோபற்பல் செய்யபாலொன்றேயாகு
மருஞ்சமயாதிக்கெல்லாம் மன்னேநீயொருவளென்றும்

முன்னமெத்தனைபேரெம்மைமுதற்பெற யாருமபெற்றோ
பின்னமெத்தனைபேர்நம்மை யீன்றுநர்நாமுமவ்வா
றன்னதிலமையுஞ்சுற்ற மளவிடமுடியாதையோ
வின்னலாமுலகவாழ்க்கை யீதொருவியப்பாமாள்வாய்

அட்டமாசித்துமேனை யளக்கருந்தொழில்கற்றனோர்
வட்டமாவாழிசூழ்ந்த வயின்மணிலெளிதிற்செய்வார்
கெட்டமாமனத்தைச்சற்றே கிளர்தலையடக்கவொண்ணாக்
கட்டமாமெனநூற்சொல்லுங் காரணமயக்கேயன்றோ.

### கலிநிலைத்துறை.

கருப்பயோனியற் கலக்குறுபவமது தீரத்
தருப்பையாதிசே ரேக்கியந்தவமகமேனோ
திருப்புரிந்திடுவக் காந்திரியுமேயோதின்
னிருப்பிறப்பெனு மிடர்தனையிழந்திடலாமே

பூதனை யுயிர்பா லொடுகவர்ந்துபூரியனாந்
தீதனசகடினை யுதைத்திடு திருமாற்கே
நீதநற்சகோதரி யெனுநின் மலிகூற்றின
ராதர்வந்தெனைத் தொடர்பொழு தடிமையைக்காவே

கடவுணாயக னேவலாற் கன்மழை பொழியத்
திடவுமாகிரி குடையதா வெடுத்துக் கோகிநிசெ
யடற்கு திருவாயனஞ் சோதரியனந்தன்
படமதினுறு பாரின்மேலுனையலாற்கதியார்

அளப்பருஞ்சரா சரமதிற் றரையினி லாய
வளப்பமானிடர் மாண்டவர்வானுறுமீனி
லுளத்தொகையினு மதிகநின்வாழ்வதற்கிரங்கி
யுளமடங்கொடு கவனுநெஞ்சேயுமைபணியே

வானுறும்பல மீனுடன்ரவி முதற்கோட்க
ளூனுறுமுயிர்த் தாவரமுதன் முறைப்படியாக்
தானுறமிதில் யாதொருசடங் கொடுதவித்தேகன்
மானுறுவிழி பாகதவடிவுடன் வருவாய்

178881
Acc: 211

படர்ந்தபாதபம் வித்துளே யடங்குமாப்போல
வடர்ந்தவெஞ்சட நாத விந்திடையவ னொடுங்கித்
தொடர்ந்தவெவ்வினைக் கேற்பவித்துய ருலகதிலா
யிடர்ந்தவைந்தொழி னடத்திடு மீசுரியாளே.

பாளைவாய்ந்திடு கமுகின்மேலறற் பெருக்கோட
வாளைபாய்ந்து வான்றுளியுட னிறங்கிடுவளமா
ராளைதென் குளந்தாபுரி மேவிடும்பறையே
காளையூர்ந்தவ னொடுறைகருணை யாரமுதே

இக்குவேவறுக்கை யரம்பையு மெழிலுறு பொழிலிற்
கொக்குமேற்குயில் கூவிடுஞ்சார்பதிற் கோயிற்
புக்குமாரணியே நரையானின் மேற்காடை
யொக்குற வமற்பசுமைசே ரன்னவோவியமே

ஆதாமில்லையென வெருவுவர்தமைப் புரந்து
மாதரந்தொறு மடியவர்பதந் தொழுதேற்றத்
தீதரத்திரு நயனநோக்கிடுந் திகழ்வடிவே
வாதரவரந் தருகுவைமலர்ப் பதம்பணிந்தேன்.

சாதிபேதமுஞ் சகமுதன் மாயையுநீக்கி
வாதியாமன மடக்கிவன்பாத கந்தவிர்த்து
நீதியாறிட நிட்டையிற் பரியினை நிறுத்திச்
சோதியாமுனைக் கண்டிலேன்சோர் வதையகற்றே.

வேலைசூழ்ந்திடு ஞாலமீதிற் றிடுங்கிரியைக்
காலைமுன்னுறப் புசித்திடப் பொருடனைக்கவரப்
பாலையேயெனு மனத்தராப்பவம் புரிவதலால்
வாலையாமுனைத் தொழுதுமெய் வயங்குவோரில்வே.

போதுகொண் டடியார்நினைப் போற்றியேமகிழ
மோதுமைந்துடை யாளிமேன் மோனநாயகியா
போதுசூல மாபடையுடன் வரதமுமொளிரத்
தீதநீக்கிட யிவணுறுந் தீனரச்சகியே.

அற்பவாழ்விதி னித்திரைபாதி நாட்கழியுங்
கற்பபாலியஞ் சோடசங் கழிந்திடமேலாப்
பற்பல்பீடைக ளிடையிடை பற்றியே நீங்கச்
சொற்பநாளதே யெஞ்சிடுஞ் சோதியைப் பணிவாய்.

அறுமதங்களு மோர்ந்திடிலங் தகர்கரியைத்
தறுகரங்களா லவயவந் தனித்தனி தடவி
யுறுப் புகன்றிடுந் தன்மையா முறுபொருளொன்றாய்
நறுமறைகளுக் கெட்டிடா நாயக மணியே.

கருப்பை யுற்றுவெம் முதரமு முதிரமுங் கனல
விருப்பதி நெருக் குறவிவண் லபமுறுங் காலை
யுருப்படுந் துயரோவெவ ருப்பரே துணிந்து
விருப்பமா யுனையண்டினேன் வினைப்பவ மகற்றே.

வாதுசேர் மனவழிப் படிப்பவமது வழங்கித்
தீதுடற்றி வெனைத்திரு வடியர்தங் கூட்டி
லேதுறவருள் பெருகுவ தெப்பிறப் பாமோ
தாதுசேர் தொடையணிந் திடுந்தைய னுபகியே.

கானுறு குறமகடனைக் கானகம் கவர்ந்தத்
தேனுறு மலர்க்கடம்பனைத் தெவ்வற வீன்ற
மானுறு விழிமாதரா நினைப்பணிந் தில்லார்
தானுயி ருடன்பொன் றியபிண மெனத் தகுமால்.

என்னவோ வுலகினி லுடம்பெற்றிடு வாழ்க்கை
யின்னலுற்ற சம்சாரமே யிறுதியா யடைந்துக்
கன்னல் வில்லவன் கணையினுற் கன்னியை யாவி
யென்னகொண் டெம்னுற்றிடப் புகல்வதென் தாயே.

கன்றையங் குணிலென்க் கனியுகு திருத்துளவ
மன்றலங்க லான்மாயவன் பின்னையாம் நளின
மென்றவம் பதமுரு திரிசூலியே யெழிலார்
தென்றன்மா மகவாகி கூப்புரந்திடுந் தேனே.

சிந்துரமா ரக்கனை முனஞ் சிதைத்தருளு
முந்துமா கரியானனப் பிள்ளையை யீன்ற
இந்துநேர் நுதலாயெனை யாட்கொளு மிறைவி
நந்துலாவிடு குளந்தையம் பதிக்கு நல்லரசி.

## ஆசிரியம்.

சங்கையின் மறைகளொடு வானோர்க டேடுநின்
சரணமே கதியென் னவே
சதாகால முன்னடிமை யாகயா னளதாச்
சகமீதி லுற்ற தமியேன்
நங்கைவயி னிடைகரு வுயிர்த்ததுய ராதியா
னவிலொணு மாயை சூழ
நண்ணுவெம் புலமேய கயவர்புரி கொடுமையோ
நல்லிதய மிக வாடுதே
வெங்கையுறு களிறென்ன மனமாதி யாதிலும்
வெகுளியாய்ப் பற்று தையோ
வெருவுற்ற வில்வாழ்க்கை யென்சொல்வேன் வாதனை
வெளிவிடாத் தளையு மீதே
தங்கையா யச்சுத னுடற்பவ த்யாபரி
தமியே னிவைக்கு மாளோ
தருணமிது காப்பையே சங்கரி கருணையுறு
தற்பரி மகமா யியே.

இம்மையி லுறுந்துயர்க் கெல்லா முயர்ந்ததா
மின்னலுறு வறுமை யாகும்
மிவையுறுங் கொடிதான பருவமது கூறிடி
னிளமையுற் றுன போதே
செம்மையுறு காலத்தி லுலகிலுள பல்பொருட்
செறிவாக நுகரொ ணுவே
செய்யமனை தாய்முதற் பல்லோரு மேசுவார்
செய்கரும முற்று வாந

தம்மையுறு வீரமுங் குன்றுமே யல்லாது
தக்கவவை யுரைக ளேரு
தந்திரங் கல்விசத் தியஞான மேகிடுந்
தலைகுனிந் திடலாகு மால்
எம்மையுன் றிருமன மிரங்கியிது மூழாம
லெப்போது மாட்கொள் வையே.
யெங்குநிறை வாகியந் திங்களொளி வதனமுறு
மெங்களுட மகமா யியே

சடமெடுத் துலகமிசை யளவிலா வுயிர்கொன்று
சதியாக வூண்பு சித்துச்
சத்தியமு தற்புகற் சன்மார்க்க நெறியற்று
சண்டாள ராகி நின்றே
யடமெடுத் திவனுற்ற வசடர்மன மென்னவோ
வந்தகனு மில்லையே யோ
வருமையாஞ் சிவபே தங்கள்பல வாக்கியா
எம்மைநீ தானு மிலையோ
படமெடுத் தாடரவு யேந்துமிப் பூவர்க்கு
பாழ்நரகு மில்லையோ கொல்
பவமுற்ற சடமதே யாதுநாள் வாழ்ந்திடும்
பகரீம முற்றி டாதோ
நடமெடுத் தம்பலம தாடுமந் தாயகி
நன்மனதை யீவை யம்மா
நாதவடி வாநின்ற கன்னியே விமலையாம்
நாரணி மகமா யியே.

கருவாய போதுசஞ் சிதவினைக் கேற்பவாக்
கைக்கொளும் பல ஞதியே
கதியாக வுறுமா றளித்தையே யின்றுநாங்
கண்டே யரற்றி லென்னே
திருவாய்ந்த நின்னைத் துதித்தன்முத னன்னடை
திரும்புபவ மேறுற வலோ

திகிலுற்ற வாரிவன மலையாதி பாரெலாந்
திரியிலே வினை போகுமோ
அருவான வோர்வடிவி லெங்கொழி னடத்தையை
யறியாது பலவு மெண்ணி
யதிகமா மனநொந்து வாடுவது மென்கொலோ
வவமடமை யீது தானே
தருவான தண்ணளியி னெடுநிகர் செல்வியே
தயவுகூர்ந் தெனையாளு வாத்
தருகஞ்ச மெனவுற்ற தாளிணைத் தேவியே
தற்பரி மகமா யியே.

மாயமுறு வுலகநடை யென்சொல்வே னையகோ
மனவாச பொன்க டேடி
மனைவிமுத லனைசுற்ற மைந்தருக் காக்கிடின்
மனமுவந் தன்பு கூர்வார்
காயமுறு பிணியிலோ வலதிவன் காலமாற்
காட்டுபண விரைய மாலோ
காண்புவன் முதலாய வவயவங் குன்றிடுங்
காலமுப் பனுதன் னிலோ
நேயமுறு தன்றிடங் காதியா மங்கிடின்
னேர்ந்தவா றேசு வார்கள்
நேராரெனத் தகுங் கபடயிச் சமுசார
நேர்மைவிசு வாச மேப்பபே
ஏயமுறு கானற் கிரைத்தநீ ரென்னவே
யேதுமொரு பயனு மில்லை
ஏகாந்த லோகநா யகியான வாரணி
யேசிலா மகமா யியே.

சகமயக் கானபொன் சார்ந்தபேர் தாருயிர்ச்
சதமெனக் காட்டு மாய
சங்கற்ப தாய்தந்தை மனைமைந்தர் சுற்றமுஞ்
சஙடனுயிர் கொடு போகவே

அகமயக் குறமோதி யழுவர்தங் காரிய
மனர்த்தமாப் போவ தென்று
அருமையா மிவனிறந் திடுவதற் கேங்கிடா
ரையவுல கிதுச கசமே
முகமனுரை கூறுநர் ளீங்கிவர்கள் பாசமாய்
முன்னுழைத் தான விவனே
முதுபறை முழக்கியே யிடுகாட்டி லாக்குநான்
முந்துயிர் துறந்த தாரே
சுகமற்ற சமுசார வலைபட்டு மாயாது
சும்மா விருப்ப துசிதம்
சுருதிசொற் கவினுடைய நாரியே மரகதச்
சுந்தரி மகமா யியே.

வாரிசூழ் வையமுழு தோர்குடையி லாளினும்
வான்பதியை யாள நினைவர்
வானுறும் நிதிபமென விருநிதி படைக்கினும்
வாழ்ரச வாத மேற்பார்
பாரிடை விதிப்படிய தாகுமென் பதைவிட்டு
பலகற்ப முறவென் னுவார்
பரமார்த்த மோராத பாழ்மனதி னுசையைப்
பகரவோ ரளவு முண்டோ
நாரிய வுடற்சுமையை விட்டுவிட் டுயிர்போக
நாடியே கொடுபோவ தென்
நாகமது மகவாக வரவென்று நோற்கவே
நண்ணிச் சனித்த மயிலே
சீரிய மறைக்குமுடி யாயிலகு வந்தரி
சீருற்ற ஞான சிவையே
சீதமதி யெனவா னனங்கவின் செய்நுதற்
சிந்தூர மாரி யாயே.

சாதிமத பேதமொடு கற்பனைகள் முதலாய
சர்வமும் விட்ட மேலோர்
சாசுவத கதியெனத் தொண்டுபூண் டொமுகவே
சாயுச்ய மீந்த தேவி

மாதிநெடு மண்ணசை யற்றுவெம் புலகரண
மாற்றிப் பணிந்த யோகி
மாசிலா மெய்மன மகிழ்ந்துவகை கூறவே
மாபதந் தந்த தேவி
கோதிலா மனமுற் றறம்பல புரிந்துமனை
கோலமா யுற்ற வன்பர்
கோணாது போற்றவே வேண்டுவன நல்கிடுங்
கோகனக பாத தேவி
தீதிலா வடியரைக் காக்கவொரு வடிவாய
தீனரச் சகி மாரியே
திருநுதற் பாவையஞ் சிவகாமி யென்னுநந்
தேவியே மகமா யியே.

முனையொன்று சூற்படை யங்கையிற் கொண்டுதான்
முன்னுற்ற மகிட னுயிரை
முனிவுற்று நீக்கிமே லன்புற்ற வடியரை
முன்னின்று காத்த வடிவே
சுனையுற்ற மாவனந் தனிலுற்று வள்ளியின்
சுகமுற்ற வாறு முகனைச்
சுதனெனத்த வடிவுடன் பரிவுபெற வீன்றிடுஞ்
சுந்தரச் சோதி யாளே
உனையன்றி வேறுகதி யுலகிலுண் டென்னவே
யுற்றறிவி லூன்ற வில்லை
யுண்மையாம் நினதுபத மெந்நாளு மன்பதா
யுருமனத் தெண்ணினேன் யான்
எனையுந்து தீவினை தனைநொந்து நித்தமு
மெண்ணிடுங் கவலை தீர்ப்பாய்
யெம்பரா பரியான வம்பிகா தேவியே
யீஸ்வரி மகமா யியே.

வாதமிடு பலசமயம் யாவினும் நினையன்றி
வாழ்த்தவோர் பொருளு முளதோ
வந்திக்கு மன்பரின் மனமன்ன வடிவாகி
வாழ்விக்கு மோன வடிவே

நாதமொடு விந்துவோ முடிவிலா வெளியிலோ
நலமான கால மதிலோ
நண்ணுமிப் பூதியந் தன்னிலோ வக்கரம்
நாடிடும் வகை தன்னிலோ
வேதமுடி தன்னிலோ நீயமர்ந் திடுவதென
வேண்டினோ ராய்ந்து நின்று
வெகுவாக முன்சொல்லு மிடமெலா மிலவுமென
வெவ்வினை யகற்று மன்பர்
நீதமுறு மனமதே யிடமாக வுற்றிடும்
நின்மலா னந்த தேவி
நிதியுற்ற தென்குளந் தைப்பதியி லுற்றிடும்
நீலியே திரிசூ லியே.

எண்ணரிய படையினொடு கவுரவர் போரதனி
லெழில் விசயசா ரதியென
வெளிதிலா பாரதமு டித்துவெவ் வாணனை
யெமபதியி லாக்கி மேனுண்
மண்ணளந் ததையுண்ட மாயனின் றங்கையே
மலரயன் முதலி யோர்கள்
மன்றலம் போதுநிகர் பாதமதை யேதொழும்
மணிமந்த்ர ரூபி யாளே
கண்ணகன் மேதினியி னின்பாத மேற்றிடுங்
கடையனு மெனையா ளுவாக்
காமெனுங் கூந்தலின் மதுமாலை யணிகின்ற
காமாச்சி யான பரையே
விண்ணவர்க ளறியொணு மறைமுடியில் விளையாடு
மெய்ப்பொருட் சோதி யாகி
விமலிபரி பூரணி குளந்தைநக ரதனிலே
மேவுமக மாயி யுமையே

மாலொத்த குழலிடை முருகவிழ் மதுமாலை
மயிலுறச் சூட நிமிறு
மலிவுற்று ரீங்கார மாயாட வோர்சியே
மதிப்கா முகசத்தி லாருநு

சேலொத்த விழியிசைக் கரியமை தீட்டியே
சேர்நுதற் றிலக மிட்டுச்
செய்யதோ டிவர்குழைக ளொளிவீசி யணியுறச்
சேர்சரிகை தூசு கச்சை
மேலொத்தி மின்னிடைக் காபரண மிட்டுமே
மேயசெங் குமுத வாயின்
மேவுதந் தங்கள்வெண் முத்தென்ன வழகுற
மென்முருவ லார்த்து நோக்கிப்
பாலொத்த மொழிபேசி மாயவலை போட்டிடும்
பைந்தொடிக ளுறவு மாமோ
பாரெல்லா மீன்றிட்ட ராஜராஜேஸ்வரி
பரஞ்சோதி யெனு மாரியே.

அறிவியாறைப் பிரணவம தாயாது வோதிட்ட
வலர்மலர்ப் பிரம குருவை
யம்மறைக் குற்றபொரு ளீங்குரைதி யென்னவே
யறியாது தான் விழிப்பச்
செறிதலைக ளைந்தினுங் குட்டியே சிறையுறச்
செய்துமே லமரர் கோவின்
செப்பபுத் திரிதேவ யானைமண முற்றுமே
செந்தூரில் வாழ்ந்து நீத
நெறியிலாச் சூர்கடிந் தசலகிர வுஞ்சமே
நெக்குருவ விட்ட வேலோன்
நேர்மையுறு பாலவடி வாகிமடி யேறவே
நெஞ்சுவகை யானபரைமே
வறிதான வடியனின் றுயர்கடிந் தெனையாண்டு
வாழ்விக்க வந்த தேவி
வந்தவடி வானதிரு நடனவோங் காரியே
வானுடர் போற்று முமையே.

சுகமான கைமிசை யாதாரமின்றி யோர்
சுகமிலா வாழ்வை நம்பிச்
சூனமயான சடமதற் கிரைதேடி நித்தமுஞ்
சுற்றுமெனு மாயை சுற்ற

வாதான பொருடனை யளவிலா வேண்டுமென
வல்வினைகள் பலதேடிடும்
வகையிலாப் பேய்மனதை யண்டியே யுற்றகதி
வாதிக்கு தேய னுளமே
தீதான கயவரைப் போலொத்த புலமேய
தீயரின் கொடுமை பெரிதே
தீமையேன் படுதுய ரகற்றிநீ யாளுவாய்
திருவுற்ற ஞான மணியே
மாதான தேவகி வயிற்றினி லுதித்தருண்
மாலவன் றங்கை யாளே
மரகதத் திருமேனி யொளியுறக் கவினுற்ற
மாரியா மகமா யியே.

பரதமொடு பண்டிதஞ் சோதிடம் மந்திரம்
பலமான சித்து மேனைப்
பகர்கற்ப ரசவாத சூட்சமொடு ஞானமும்
பரமபத வாழ்வு மேலாஞ்
சுரதமுறை மதன நூ லொளிருபத் மினிமனைச்
சுபமான மைந்த ராதி
சுரர்பதிக் குற்றவிரு நிதியமும் பூவாதி
சுற்றுநா லாய படையா
யிரதமுறு வாதிகள் பலவாறு போற்றவே
யிகலிலா ஞால கோவா
யிருப்பவரி யாசனஞ் செங்கோ லிடன்றிடம்
இவையெலாம் மகிழ்வா கவே
வரதமுறு நினையன்பர் போற்றவருள் செய்வையே
வந்தடைந் தூற்ற பேர்க்கே
வண்மையுறு யாளிமே லூற்றடியர் வினைதீர
வந்ததிரு மகமா யியே.

கண்ணகன் மேதினியி லாண்டுற்ற சித்தர்கள்
கருதரிய மகிமை வாய்ந்து
கண்டரச வாதமுத லிச்சட மழியாத
கருவான நூல்க ளெல்லாம

விண்ணவர் கனிகரெனப் பின்னவர்க ளாமாறு
விளம்பினர் கருணை யாக
விரிவான நூலதனை முற்றும்நனி யுணரவே
விதியாயு ளிலையெனி னுமே
யெண்ணரிய வந்நூலி லணுவேனு மிதயமதி
லெண்ணியே பார்த்தி டாது
எதிருற்ற முத்தையறி யாதவொரு கோலமென
வேயவைவயி லாகி மனமே
நன்னவொரு பயனிலா துற்றழியு மாந்தர்தம்
நவையறிவி னிலைதீ தையோ
நறுமலர்த் தார்வேயு மானந்த வல்லியே
நாயகி மகமா யியே.

---

## வேறு.

உலகெலாம் பெற்றங் கசமுகன் குகனை
யுரிமையாய்ப் பயந்துவெஞ் சமனை
சலகெலாங் கழுவி லேற்றுவித் தருளு
மருட்கவு ணியற்குப்பா லீந்து
நிலவுறுங் கன்னி யெனுமுணு முலையே
நின்மலி முக்கணான் வதுவாக்
கலகமா விழியார் மயக்கில் வீழ்வேனைக்
காத்திடுங் கருணையாம் வடிவே.

வஞ்சக மனத்தின் மயக்கதை யறுத்து
வாழ்வெனு ஞானபொற் பதத்தைத்
தஞ்சமென் றடைந்து வருளுறப் போற்றத்
தற்பரி நினதரு டருவாய்
மஞ்சமர் பொழில்சூ ழெந்தையம் பதியின்
மகிழுறச் சிறப்புறு கோயி
லஞ்சலி யெனவே யடியரைக் காக்க
வமர்ந்திடு மாரியம் பிகையே.

கருவிளைமாத ரகட்டிடை வினையாற்
கலக்குறச் சேர்ந்துபின் றோன்றி
யுருவிளை மலங்கொள் சடத்தினை யொன்றி
யுறும்பவப் பலன்கனி நுகர்ந்து
வருமன மயக்கி லாழ்ந்துவெம் பவமே
வயங்குறச் செய்திடு வேலை
திருவுள மிரங்கி யாட்கொள நினைவாத்
திரிபுராந் தகியெனுந் தேவி.

மதிநதி யணிந்து மன்றதி னடிக்கு
மறைமுடிக் கடவுளி னோர்பாற்
கதியுற வமர்ந்திவ் வுலகினைப் புரந்த
காருணிக் கருணையங் கடலே
விதிமுத லோர்கள் பணிந்திடும் பரையே
வீண்டனி னுட்கழி யாமற்
றுதிபுரிந் தடியேன் போற்றிட வருணின்
றுணையுறு மணிமலர்ப் பதமே.

சுந்தரன் றனையோ ரடிமையா முறிகொள்
சுந்தரன் வாமம துறைய
கந்தரங் குலவுங் குறும்பிடை தவத்தாற்
கனிவுடன் பெற்றமா மானே
யந்தரர் முதலோ ரடியினைத் துதிக்க
வருடருஞ் சத்தினி வடிவோ
யெந்தனை யாளாக் கொண்டருள் புரிவா
யெங்கினும் நிலவிய விமலி.

சேய்க்கறி யுண்ட சிவன்றனை நோக்கிச்
செய்யகண் யாதென வினவிப்
பேய்க்குறு சுடலை யுற்றிடு பித்தன்
பேசிடில் ரவிமதி யெனவே
வேய்க்கவி னுறவவ் வயினிடை யுதித்த
வித்தக னிருவிழி புதைப்பச்
சேய்க்கரு மிருள்பா ருறச்சித நுதற்கண்
டிறந்திடப் புரிதயா பரியே.

நச்சரா வுயர்த்த கவுரவன் றெவ்வாம்
நரன்முனந் தவமிலே புரிய
வெச்சரா சரமு மீன்றுகாத் தளிக்கு
மேகனே டன்றருள் தருக
விச்சையா யுரைசெ யணிமணிப் பணியாய்
விண்ணவர்க் கரசியா யுற்ற
பச்சையங் கொடியா யடியனேக் காவாய்
பகர்தரு வரதமெய்ப் பொருளே.

பஞ்சபா தகமே செறிந்தொரு பவமாப்
பார்மிசை யுற்றதோ வெனச்சொல்
கஞ்சனைச் செகுக்கப் பிறந்திடுங் கண்ணன்
றங்கையா யாயர்மன் பதியி
லஞ்சிடா திருக்க வன்றவ தரித்தவ்
வச்சுதன் றனேயிட மகற்றி
வஞ்சனு மரக்கன் கண்முனந் தோன்றி
வானிடை மறைந்தவம் பிகையே.

மீனவன் மகளா யொருகுடை நிழலில்
மிகுந்தர சியற்றிடு நாளிற்
கானவன் மணப்பக் கந்தனே யாகுங்
கவினுடை யுக்கிரன் றனேப்பெற்
றூனபின் றாய மணிமுடிக் கோயி
லமர்ந்திடு மரும்பொனேத் தாண்
வானவர் துதிக்கு மலர்ப்பத முடைய
வாட்டடங் கண்ணியே யாளாய்.

சோதியாம் பரனுற் சிரமதிற் றெடவேஞ்
சோகமர் வரந்தனே யடைந்துக்
கோதியற் றரக்கன் மாய்ந்திட முன்னங்
கோண்பிறை நுதலணங் காகி
யோதியற் றவனே யெரியவே மயக்கா
லொன்றுவித் தவன்கரஞ் சிரத்திற்
போதிய விபுத மாலவன் றங்காப்
பொற்றொடி குளந்தையூர்க் கரசி.

சிறுவிதி யான தக்கனின் மகவாச்
சிறப்புடன் றோன்றிமேன் மணப்பத்
தறுவிதி மகமொன் றினைநவி தரவே
தான்செயு மெல்லையி னுதன்
செறுவிதி வீர புத்திர னெனவாச்
சென்றுமே யம்மக மழித்து
வுறுவிதி யடக்கு முருத்திரன் றேவி
யோங்கிய வுத்தமி யுமையே.

நரஹரி யெனச்சென் றிரணிய னுருவை
நகங்கொடு வகிர்ந்தவ னனை
முரஹரி பினையென் றுலகெலாந் துதிக்க
முனிவற வருள்செயு முதல்வி
பரநெறி புகுதா ரறியொணா வடிவா
னறுமுகன் றனைமகிழ்ந் தருளும்
பரசிவை யெனுமா பருப்பத மகவே
பரிவுட னுண்டருள் வாயே.

பரமனு மானுமொன் றுமோருருவைப்
படிமிசை பார்க்கு மாரடைந்துத்
திரமிகு நோற்றல் புரிந்துகண் டருளுந்
திருநுத லொளிரு மாமணியா
யுரமிகு சுரர்க ளெவ்வெனுஞ் சூர
ருருவழிந் திடமிகக் கடிந்த
திரமிகு வேளைப் பயந்தபொற் பாவாத்
திங்கண்மா வதனமார் சிவையே.

அக்கர வடிவா யாதினும் பொருந்தி
யைந்தொழி னடத்திடு தகவோய்
சக்கர பாணி தனக்கிளை யவளே
சங்கரி மலர்த்தொடை யு[illegible]
தக்கனின் மகவாச் சென்றவ த[illegible]
தற்பரி விண்ணவர்க் கரசி
பக்கர வணிந்த வத்தனை மணந்த
வம்பிகா வறியொணா முதல்வி.

சென்னை-600 0

வாமன வடிவாய் மாவலி யிடத்தை
வனப்புடன் றியபதங் கவர்ந்துக்
காமனைப் பெற்ற வுருவிராட் டாகக்
கமழ்பத மிரண்டி னுவளக்கும்
பூமனை யேய சோதர னெனவார்
பூங்கழ லுறுமனோன் மணியே
யேமனை யன்பன் றலத்தினுக் குதைப்போர்
விடமுறை யெம்பெரு மாட்டி.

சேவுரு வாகிச் சோமுகன் றனையே
செகுத்தர னிரவொளித் தருளு
மாலுடன் றோன்றி மரகத மணிபோல்
வடிவுறு மலையருண் மயிலே
ஏனுரு கரியாப் பரனுட னிணைந்து
வெழிலுறுங் கசமுகன் றனையின்
குனுறவ மர்ந்த வன்பனோ டுறையு
வம்பிகா வெம்பவ மகற்றே.

மூன்றெழுத் ததனிற் பொருந்திடு வடிவு
முளரியை நிகர்துணைப் பதமு
மான்றலி லமர்ந்த மறைமுடிக் கடவுண்
மருங்குறை மரகத வடிவே
வான்றனிற் கடவுளோர் முதன் மண்ணோர்
வழுத்திய தோத்திரம் பலவில்
யான்றநிங் குரைத்த றனையுமே யேற்பா
யாமளை வாண்டகை யாளே.

---

வாழிதென்குளந்தா புரிமாரியும்
வாழிபின்னூல்படித்த மனுக்களும்
வாழிசெந்தமிழ்வாணரும் வையமு
வாழிவான்முகில்வாழி மறைகளே.

தோத்திரப் பாடல்கள் முற்றிற்று.

---

சென்னை-600 008
128886

உ

ஓம் பராசக்தி துணை.

மதுரை தமிழ்வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ

V. சுந்தரமய்ய ரவர்கள் இயற்றிய சாற்றுக்கவி.

கலித்துறை.

மாதமும் மாரிபொழி குழந்தாபுரி மாரியின்மேல்
சீதமதிக் குலமாறன் மகாலிங்கஞ் செய்தவத்தால்
பூதலமீதினில் மைந்தனென வந்த புண்ணியவான்
சாதுசங்கத் தருணாசலம் பாதந்தொடை சாற்றினனே.

# விளம்பரம்.

இப்புத்தகம் வேண்டியவர்கள், மதவாபுளியங்குளம் என்ற குளந்தாபுரி மகா-ள-ள-ஸ்ரீ **M.** அருணாசல நாடார் அவர்களிடத்தில் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

இதன் விலை அணா 2.